# டெலிவிஷன்



நேற்று காலையில் ராகவன் ஃபோன் செய்தான். நாளை மாலை நான் டெலிவிஷனில் தோன்ற வேண்டும் என்றான். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பற்றி ஒரு விவாத நிகழ்ச்சி. என்னைத் தவிர மூன்று பேர் கலந்து கொள்கிறார்களாம். காம்பியர் செய்கிற ஒரு பெண், கல்லூரி முதல்வர் ஒருவர், ஒரு வேலை தேடுகிற இளைஞன்.

அங்கே போய் நான் என்ன பேசப்போகிறேன் என்று எனக்குப் புரியவில்லை. ராகவன், நான் ஒரு சிறு தொழிலதிபர் என்கிற விதத்தில், சுய வேலைவாய்ப்புகள் பற்றி ஏதாவது சொல்லலாம் என்றான். அவனும் நானும் கல்லூரியில் ஒன்றாகப் படித்தோம். அவன் அப்போதே பட்டிமன்றம், பேச்சுப்போட்டி என்று சுற்றிக் கொண்டிருப்பான். இப்போது டெலிவிஷனில் புரொட்யூசராய் இருக்கிறான். நான் ஸ்க்ரூ ஆணிகளும், மறைகளும் தயாரித்துக் கொண்டிருக்கிறேன்.

முன்பின் இதெல்லாம் பழக்கமில்லாததால் வேண்டாம் என்று நான் மறுத்தாலும் ராகவன் விடுவதாக இல்லை. அவனுக்கும் கடைசி நிமிடத்தில் வேறு ஆளைத் தேட முடியாது.

கொஞ்சம் பயமாக இருந்தாலும், டெலிவிஷனில் தோன்றப்போகிறேன் என்பது சந்தோஷமாகத்தான் இருக்கிறது.

ராகவனிடம் சம்மதம் சொன்னபின் பிரேமாவுக்குத் தெரிவித்தேன். அவளுக்கு என்னைவிட சந்தோஷம். வழக்கமாய் பக்கத்து வீட்டுக்காரர்கள் டிவி பார்க்க வந்தால் முணுமுணுப்பவள் தானே போய் நாளைய நிகழ்ச்சியைப் பற்றி அறிவித்துவிட்டு வந்தாள்.

அன்றைய தினம் தொழிற்சாலைக்கு ஃபோன் செய்த, நேரில் வந்த நண்பர்களுக்கு எல்லாம் நாளை மாலை யாரையும் சந்திப்பதற்கில்லை என்று தெரிவிக்கிறவிதமாக என் 'டிவி' நிகழ்ச்சியைப் பற்றிச் சொன்னேன். நான் டீவியில் தோன்றுகிற விஷயம் என் சகதொழிலதிபர்கள் நடுவே என் மதிப்பைக் கொஞ்சம் உயர்த்திற்று.

மாலை வீடு திரும்பியதும் என் ஐந்து வயதுப் பையன் ராஜாவிடம் சொன்னேன். அவன் சீரியசாக முகத்தை வைத்துக்கொண்டு கேட்டான்.

"டிஷ்டிஷ் சண்டைல்லாம் போடுவியா?"

பிரேமாவும் நானும் சிரித்தோம். காலையிலிருந்து ஒரு முக்கியமான பிரச்சினை உறுத்திற்று. டெலிவிஷனில் தோன்றுவதற்கு எந்த உடை அணிந்து போகவேண்டும் என்று யோசித்துக் குழம்பிப்போனேன். எந்த கலர் எடுப்பாக இருக்குமென்று தெரியவில்லை. ராகவனோ இதையெல்லாம் பற்றி ஒன்றுமே சொல்லவில்லை. டெலிவிஷன் நிகழ்ச்சிகளில் நாங்கள் பார்த்தவர்கள் எல்லாரும் என்ன மாதிரி உடையணிந்திருந்தார்கள் என்று பிரேமாவும் நானும் யோசித்துப் பார்த்தோம். நினைவு வரவில்லை.

கடைசியில் எனக்குப் பிடித்தமான ஒரு மஞ்சள் நிறச் சட்டையும், பிரௌன் கலர் பேண்ட்டும் அணிந்துகொண்டு தொழிற்சாலைக்குப் புறப்பட்டேன். அங்கிருந்து அப்படியே டெலிவிஷன் நிலையத்துக்குச் சென்றுவிடத் திட்டமிட்டிருந்தேன்.

ராகவனுக்கு ஃபோன் செய்தேன். ஆளில்லை. மாலை ஐந்து மணிக்குத்தான் வருவானாம். என் நிகழ்ச்சி எட்டு பதின்மூன்றுக்கு என்று போட்டிருந்தது. நேற்று டெலிவிஷனில் நாளைய நிகழ்ச்சிகள் பகுதியில் என் பெயரையெல்லாம் அறிவித்திருந்தார்கள். நான் நிலையத்துக்கு ஆறு மணிக்கு வந்துவிட வேண்டுமென்று சொல்லியிருந்தான் ராகவன்.

தொழிற்சாலையில் உணவு வேளைக்குப் பின் ஷாப்பிற்கு மேற்பார்வையிடப் போனேன். ஃபோர்மன் சுந்தரம் கேட்டார்; "சார், டீவீல அப்பியர் ஆவுறீங்க போலிருக்கு?" ஆமென்றேன். அவர் தம் வீட்டுக்கருகில் உள்ள ஓரிடத்தில் அவசியம் டீவி பார்ப்பதாகச் சொன்னார். அன்றைக்கு ஓவர்டைம் செய்யச் சொல்லுவதாய் இருந்ததைச் சொல்லாமல் விட்டுவிட்டேன்.

நான் டாக்ஸியில் டெலிவிஷன் நிலையத்தை அடையும்போது மணி ஆறாகிவிட்டது. ரிசப்ஷனில் விசாரித்துக்கொண்டு அங்கே ரிஜிஸ்தரில் கையெழுத்திட்டுவிட்டு, ராகவன் அறைக்குப் போனேன். எல்லா அறைகளும் ஒரேமாதிரி பெட்டி பெட்டியாய் இருந்தன.

ஏற்கனவே, ராகவனும், இன்னும் ஒரு வயதானவரும் ஒரு பெண்ணும் அங்கே இருந்தார்கள். ராகவன் அவர்களை அறிமுகப்படுத்தினான். வயதானவர் கல்லூரி முதல்வர் வேங்கட்ராமன். அந்தப் பெண்தான் காம்பியர் சுமதி.

சுமதி நேரே விஷயத்துக்கு வந்தாள்.

"முதலில் நான் ஒரு சின்ன முன்னுரை சொன்னபின் உங்களை அறிமுகம் செய்வேன். நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்களோ, அதை மனத்தில் கோர்வைப்படுத்தி வைத்துக் கொள்ளுங்கள்" என்றாள்.

ராகவன், "நீ என்ன சொல்லப் போறே?" என்று கேட்டான்.

"அதுதான் எனக்கே புரியலே."

"டோண்ட் பாதர். எப்படிப் பட்டதாரி இளைஞர்கள் சொந்தமாகத் தொழில் நடத்துவதற்கு வாய்ப்புக்கள் இருக்கின்றன. பாங்க்குகளில் கடன் தருகிறார்கள்... எக்ஸெட்ரா, ... சொல்லு, போதும்."

"பாங்க் என்று சொல்லணுமா? வங்கி என்று சொல்லணுமா?"

சுமதி எப்படிப் பேசவேண்டும் என்று சொன்னாள். "காலோகியலாவே பேசுங்க. அதிகமா இங்கிலிஷ் வேணாம்".

ராகவன் ஒருமுறை பேசிக்காட்டச் சொல்ல, நான் பேசிக் காட்டினேன். அப்புறம் வேங்கட்ராமன் பேச வேண்டியவற்றைப் பற்றி விவரித்தோம்.

“எங்கே அந்தப் பையனை இன்னும் காணோம்?” என்றார் வேங்கட்ராமன். அவர் சொல்லவும் அந்த இளைஞன் சரியாக உள்ளே நுழைந்தான். நிறையத் தலைமயிரும், பெரிய மீசையும் வைத்திருந்தான். ஒரு பூப்போட்ட சட்டை போட்டிருந்தான். ராகவனைப் பார்த்து இலேசாகச் சிரித்தான்.

“இவர்தான் பாஸ்கர், அன்எம்ப்ளாய்ட் க்ராஜுவேட்” என்று ராகவன் அறிமுகப்படுத்தினான். சுமதி அவனை விநோதமாகப் பார்த்தாள். வேங்கட்ராமன், தான் வயதானவர் என்கிற தைரியத்தில் ஒரு ஜோக் அடித்தார்.

“இவ்வளவு மயிர் வெச்சிண்டிருக்கியே. அதான் உனக்கு இன்னும் வேலை கிடைக்கல்லே” என்றார்.

எனக்கு என்னவோ போலிருந்தது. பாஸ்கர் அதை விரும்பாதவனாய் அவரை முறைத்தபடி ராகவனிடம், “இவர்தான் ப்ரின்ஸிபாலா?” என்றான்.

“யெஸ்.” என்ற ராகவன் அவனுக்கு எங்களை அறிமுகம் பண்ணிவிட்டு அவன் பேசவேண்டியதை எப்படிப் பேசுவது என்று சொன்னான். இதற்குள் மணி ஏழாகி விட்டிருந்தது.

“நீங்க கொஞ்ச நேரம் ரிலாக்ஸ் பண்ணுங்க. நான் ஸ்டூடியோவுக்குப் போய் எல்லாம் ரெடியான்னு பார்த்துட்டு வரேன்” எனப் புறப்பட்ட ராகவன் என்னைப் பார்த்து, “இந்த ஷர்ட்டை அப்புறம் மாத்தணும். டார்க் கலர் போடணும்” என்றான்.

வேங்கட்ராமன் “நானும் மாத்தணுமா?” என்றார். அவர் ஒரு ப்ரௌன் கலர் சூட் அணிந்திருந்தார். “நீங்க யாரும் மாத்த வேண்டியதில்லை” என்று சொல்லிவிட்டுப் போனான் ராகவன். சுமதி நிறைய டெலிவிஷன் அனுபவமிருந்தவளாதலால் பெரிய கருநீலப் பூக்கள் போட்ட மஞ்சள் புடவை அணிந்திருந்தாள்.

வேங்கட்ராமன் என்னோடு பேச ஆரம்பித்தார். பாஸ்கர், அறையின் ஜன்னல் பக்கம் போய் நின்றுகொண்டு வேடிக்கை பார்த்தான். சுமதி அவனோடு பேசிக்கொண்டிருந்தது, கேட்டது.

“நீங்க டீவீல ஒண்ணும் காஷுவல் ஜாப் ட்ரை பண்ணலியா?” என்றாள்.

“இங்க எவன் வேலை செய்வான்? இன்னிக்கே ராகவன் சார்

ஒரு எழுபத்தஞ்சு ரூபா கிடைக்கும்னு சொல்லவே வந்தேன்” என்றபடி பாஸ்கர் ஒரு பீடியை எடுத்துப் பற்ற வைத்தான். வேங்கட்ராமன் அதைப் பார்த்துவிட்டுத் தம் முகத்தைச் சுளித்துச் கொண்டார்.

ராகவன் வந்து அழைக்க, நாங்கள் எல்லாரும் அவன் பின்னே போனோம். அந்தக் காரிடாரின் கடைசியில் திரும்பி ஒரு படிக்கட்டில் இறங்கி இரண்டு கதவுகளைத் தாண்டி இன்னொரு காரிடாரை அடைந்தோம்.

முதல் அறைக்குள் நுழைந்தோம். மேக்கப் ரூம். இரண்டிரண்டு பேராக அமர, இரு பெண்கள் முகத்தில் பவுடர் மட்டும் பூசினார்கள். வெங்கட்ராமன் முதலில் முகத்தைத் தண்ணீரால் கழுவிவிட்டு வந்தார். “அப்பதான் மேக்கப் நல்லா இருக்கும்” என்றார்.

மேக்கப் முடிந்தவுடன் ராகவனிடம், “நானும் பார்த்துட்டேன். ஒருத்தரும் ஒழுங்கா மேக்கப் போடறதில்லை. கழுத்தை அப்படியே கறுப்பா விட்டுடறாங்க” என்று சொல்லிவிட்டு என்னைப் பார்த்து, “நான் நிறைய நாடகத்துலே நடிச்சிருக்கேன் சார்! அது ஒரு காலம்” என்று சிரித்தார். பாஸ்கரைத் தவிர எல்லாரும் கூடச் சிரித்தோம்.

அடுத்து காஸ்ட்யூம் அறைக்குப் போய் நாலைந்து ஷர்ட்களை நிராகரித்துவிட்டு நான் ஒரு ஷர்ட் அணிந்து கொண்டேன். ராகவன் எல்லாரையும் அங்கேயே நிறுத்திக்கொண்டு இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் தர ஆரம்பித்தான். அவன் பக்கத்தில் ஒரு நடுத்தர வயதுக்காரர் இருந்தார்.

“முதலில் சுமதி பேசுவாங்க. அதுக்கப்புறம் அறிமுகப்படுத்தும்போது ஒவ்வொருவராய்ப் பேசலாம். ஒரே நேரத்துல இரண்டு பேர் பேசாதீங்க. காமராவைப் பார்க்க முயற்சி பண்ணாதீங்க. அது உங்களைப் பார்க்கும். நிகழ்ச்சி முடிய நேரமாயிட்டதும் இவர் வந்து சைன் பண்ணுவாரு” என்றான்.

நடுத்தர வயதுக்காரர், தான் என்ன சொல்வார் என்பதை விவரித்தார். ஒரு நிமிடம் மீதம் இருக்கும்போது விரலால் ஒன்று என்று காட்டுவார். அப்போது யார் பேசிக் கொண்டிருந்தாலும் உடனே இயல்பாக நிறுத்திக்கொள்ள வேண்டும். அப்புறம் விரலால் சுழித்து சைஃபர் காட்டுவதோடு முடிந்துவிடும். காம்பியர்

கடைசியில் பேசி முடிப்பார். விளக்குகள் அணையும்வரை யாரும் எழுந்திருக்க வேண்டாம். நிகழ்ச்சியின்போது அடிக்கடி தலையாட்டவோ, நாற்காலியில் அசையவோ வேண்டாம்.

“வாங்க போகலாம். இப்போ நம்ம நிகழ்ச்சிக்கு முன்னால நியூஸ் இருக்கு. அதனால சத்தம் போடாமப் போய் சீட்ல உட்காரணும்” என்றபடி அந்த ஆள் எங்களை அழைத்துப் போனார்.

“நான் கண்ட்ரோல் ரூமுக்குப் போறேன்” என ராகவன் விடைபெற்றுக் கொண்டான்.

நாங்கள் எல்லாருமாக இன்னுமொரு கதவைத் திறந்துகொண்டு ஸ்டூடியோவில் நுழைந்தோம்.

ஸ்டூடியோவின் நடுவே தள்ளித் தள்ளி இரண்டு பகுதிகளில் மட்டும் வெளிச்சம் தெரிந்தது. சுற்றியிருந்த தடுப்புக்களின் வழியே ஊர்ந்துபோய் நடுப் பகுதியை அடைந்தோம்.

ஒரு பகுதியில் ஒரு பெண் உட்கார்ந்திருந்தாள். அவளெதிரே டேபிளில் காகிதங்கள் இருந்தன. கீழே நிறைய ஒயர்கள். மேலே நிறைய விளக்குகள், இன்னொரு பகுதியில் ஒரு சிறுமேடை போட்டிருந்தது. அதிலிருந்த நான்கு நாற்காலிகளில் நாங்கள் போய் உட்கார்ந்தோம்.

மறுபகுதியிலிருந்த பெண்ணுக்கு எதிரே போய் நின்ற எங்களுடன் வந்த நடுத்தர வயதுக்காரர் கையை ஒருமுறை உயர்த்தி இறக்க, அவள் படிக்க, ஆரம்பித்தாள். எங்களுக்கு இடப்புறம் தெரிந்த ஒரு டெலிவிஷன் திரையில் அவளைப் பார்த்தேன்.

அவள் செய்தி வாசித்து முடித்தாள். அவள் முகத்தில் அந்தப் புன்னகை உறைந்து போயிருந்தது. அவளெதிரில் இருந்த இரண்டு காமிராக்களும் எங்களை நோக்கி நகர, அவள் புன்னகையைக் களைந்துவிட்டு எழுந்தாள்.

எங்கள் விளக்குகள் பிரகாசமாயின. நடுத்தர வயது ஆசாமி எங்கள் எதிரே வந்து நின்றார். நான் காலரைச் சரிசெய்து கொண்டேன். அவர் கையை உயர்த்தி இறக்கினார்.

சுமதி பேச ஆரம்பித்தாள்.

டெலிவிஷன் நிலையத்தின் கீழ்த்தளத்தின் முகப்பிலிருந்த அந்த அறையில் உட்கார்ந்திருந்த ட்யூட்டி ஆஃபீஸர் தம் மேஜையிலிருந்த சில காகிதங்களை ஒழுங்குபடுத்திக் கொண்டார்.

அவர் எதிரே இருந்த டெலிவிஷன் செட்டில் அந்தப் பெண் செய்தி வாசித்துக் கொண்டிருந்தாள். ஒரு நீண்ட கொட்டாவி விட்டபடி அதைப் பார்த்துக் கொண்டிருந்தார் ட்யூட்டி ஆஃபீஸர்.

செய்தி முடிகையில் அந்த நியூஸ் ரீடர் பெண்ணின் சிரிப்பைக் கண் கொட்டாமல் பார்த்து ரசித்த அவர் ‘அடுத்த நிகழ்ச்சி இன்னும் சில வினாடிகளில் தொடரும்‘ என்ற அறிவிப்பைப் பார்த்ததும் மீண்டும் தம் முன்னிருந்த காகிதங்களை ஒழுங்குபடுத்தி பால் பாய்ண்ட் பேனாவை எடுத்தார்.

நிகழ்ச்சி ஆரம்பமாகியது.

ஒரு பெண்ணின் முகம் திரையில் தெரிந்தது. அவள் பேச ஆரம்பித்தாள். “நம் நாட்டில் இன்று நிறைய இளைஞர்கள் வேலைவாய்ப்புக்களை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். நம் அரசாங்கங்கள் முன்னைவிட வேலைவாய்ப்புக்களைப் பெருக்குவதில் மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டுள்ளன. இன்று வேலைவாய்ப்புக்கள் பற்றி உரையாடுவதற்காக, இங்கே ...”

அந்தப் பெண்ணின் கழுத்தின் மீது சூபர் இம்போஸ்டாக அவள் பெயர் தோன்றிச் சில விநாடிகள் நின்று மறைந்தது. ட்யூட்டி ஆஃபீஸர் தம் முன்னிருந்த காண்ட்ராக்ட் காகிதங்களில் சுமதி என்கிற பெயரைத் தேடி பால்பாயிண்ட்டால் டிக் செய்தார்.

அடுத்து, திரையில் முன் வழுக்கையும் மூக்குக் கண்ணாடியுமாக ஒருவர் தோன்ற, ட்யூட்டி ஆஃபீஸர் வேங்கட்ராமனின் காகிதத்தை டிக் செய்து கீழே வைத்தார். திரையில் தலையைத் திருப்பி, “என்ன சொல்றீங்க மிஸ்டர் ரவி?” எனவும் காமிரா ரவியைக் காட்டிற்று.

“ஆமா, நீங்க சொல்றது சரிதான். இப்ப நிறைய பேங்க்ல சொந்தமா தொழில் நடத்த கிராஜுவேட்சுக்கு லோன் தராங்க” என்றான் ரவி. அவன் கண்கள் பக்கவாட்டில் நோக்குவதைப் பார்த்த ட்யூட்டி. ஆஃபீஸர் சிரித்துக்கொண்டார். ஸைடில் இருக்கிற டெலிவிஷன் செட்டில் தன்னையே பார்த்துக் கொள்ளுகிறான் போலிருக்கிறது.

சுமதி திரும்பவும் தோன்றினாள்.

*“மிஸ்டர் பாஸ்கர். நீங்க ஆறு வருஷமா வேலை தேடிக்கிட்டிருக்கீங்க. நீங்க தற்போதுள்ள முன்னேற்றமான சூழ்நிலையைப் பத்தி என்ன நினைக்கறீங்க?”*

*“ஆமா. நான் ஆறு வருஷமா வேலை தேடிக்கிட்டிருக்கேன்” என்று ஒரு நிதானமான ஆண் குரல் ஒலிக்க ஆரம்பித்ததும், காமிரா மெல்ல அந்தக் குரலுக்குரிய முகத்தைத் தேடிப்போய் நின்றது. நிறைய தலைமயிரும், பெரிய மீசையும், சோகமான கண்களுமுடைய அந்த உருவத்தின் கழுத்தில் ஆர். பாஸ்கர் என்ற வார்த்தைகள் தோன்றி மறைய, ட்யூட்டி ஆஃபீஸர் நான்காவது காகிதத்திலும் டிக் செய்துவிட்டு எல்லாக் காகிதங்களையும் ஓரமாக டேபிள் வெயிட்டின் கீழ் வைத்துவிட்டு, தம் நாற்காலியில் ஓய்வாகச் சாய்ந்துகொண்டார்.*

*பாஸ்கரின் குரல் வேகமாகத்தொடர்ந்தது.*

*“நான் வேலை தேடறேனே ஒழிய எவன் எனக்கு வேலை தரான்? எல்லாம் திருட்டுப் பசங்க. லஞ்சம் வாங்கறானுங்க, உறவுக் காரனுக்குத்தான் வேலை தரான். கேட்கறதுக்கு எந்த மந்திரிக்கு வாய் இருக்குது? ஆஃபீஸர், மந்திரி எல்லாருமா சேர்ந்து இந்த நாட்டையே ஏமாத்திக்கிட்டிருக்கானுங்க. வேலைவாய்ப்பாம்! அதிகரிக்கறான்களாம்! யாருக்கு வேலைவாய்ப்பு? எவனை ஏமாத்தப் பாக்கறான்க? இவன்க எல்லாரையும் ஒழிச்சுக் கட்டினாத்தான் நாடு உருப்படும்...”.*

*ட்யூட்டி ஆஃபீஸர் திடுக்கிட்டு எழுந்தார். இன்னும் நிறைய இடங்களில் நிறையபேர் திடுக்கிட்டு எழுந்தார்கள்.*

*கல்கி*
*11.2.1979*

*டிவி உலகம்*